3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல், பள்ளிகளில் கண்காணிப்பு கேமரா பொருத்துதல், மாணவ, மாணவிகளுக்கு ஷூ மற்றும் சாக்ஸ் வழங்குதல் தொடர்பான பள்ளிக் கல்வித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உலகத்தையே மாற்றக்கூடிய சக்திவாய்ந்த கருவி கல்விதான். ஒருவனுக்கு அழிவில்லாத பெருஞ்செல்வமும் கல்விதான். இத்தகைய இன்றியமையாத சிறப்புடைய கல்வியை தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகள் அனைவரும் பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடும், கல்லாதவர்களே இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிட வேண்டும் என்ற குறிக்கோளுடனும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது.*

அந்த வகையில், மாநிலத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் தரமான கல்வியைப் பெறும் வகையில் செயல்படுத்தப்படவுள்ள சில புதிய திட்டங்கள் குறித்து நான் இங்கே அறிவிக்க விரும்புகின்றேன்.

1. அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, நடப்பாண்டில் 124 கூடுதல் வகுப்பறைகள், 83 அறிவியல் ஆய்வகங்கள், 85 நூலக அறைகள், 84 கலை மற்றும் கைவினை அறைகள், 50 கணினி அறைகள், 92 மாணவர் கழிப்பறைகள், 104 மாணவியர் கழிப்பறைகளைப் புதிதாகக் கட்டுதல், 1,475 மாணவர் கழிப்பறைகளையும், 1,849 மாணவியர் கழிப்பறைகளையும் பழுதுபார்த்தல், 149 பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி ஏற்படுத்துதல், 132 பள்ளிகளுக்கு 4,493 மீட்டர் நீளமுள்ள சுற்றுச்சுவர் எழுப்புதல், 1,649 மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான கழிப்பறைகள் அமைத்தல், சிறப்புக்

2019 ஜூலை 8] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கென கைப்பிடியுடன்கூடிய 5,726 சாய்வு தளங்கள் அமைத்தல் மற்றும் 156 பள்ளிகளில் உள்ள வகுப்பறைகளைப் பழுதுபார்த்தல் ஆகிய பணிகள் 163 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

2. இந்தியாவின் அறிவுசார் மையமாக தமிழ்நாடு திகழ வேண்டும் என்ற நோக்கத்துடன் மாண்புமிகு அம்மா அவர்கள் "தொலைநோக்குப் பார்வை 2023"–ஐ வெளியிட்டார்கள். காலத்திற்கேற்ப மாற்றங்களைப் புகுத்தி, 12 ஆம் வகுப்பு வரையிலான கலைத் திட்டம் மற்றும் பாடத் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டம் மற்றும் கலைத் திட்டத்தின்படி 2, 3, 4, 5, 7, 8, 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடப் புத்தகங்கள் 2019–2020 ஆம் கல்வியாண்டின் பயன்பாட்டிற்கென அரசால் தயாரிக்கப்பட்டுள்ளன. பாடப் பொருட்கள் சார்ந்த கூடுதல் தகவல்கள், மாணவர்களின் செயல்பாடுகள், படங்கள், மதிப்பீடு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பகுதிகள் போன்றவை உள்ளீடு செய்யப்பட்டு, செறிவூட்டப்பட்ட பாடப் புத்தகங்களாக இப்புத்தகங்கள் விளங்குகின்றன. இப்புத்தகங்களை ஆசிரியர்கள் சீரிய முறையில் பயன்படுத்தவும், அதன்மூலம் மாணவர்களின் கற்றல் விளைவுகளை மேம்படுத்திடவும், கற்றல் விளைவுகளை ஆய்வுசெய்து, கற்றலில் உள்ள கடினமான பகுதிகளைக் கண்டறிந்து, அதற்கு ஏற்றவாறு, திட்டமிட்டு வகுப்பறை செயல்பாடுகளை மேம்படுத்திட, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உதவி புரியும் வகையில் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 61 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மாணவ, மாணவியரின் நலனில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு, அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் மாணவியர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்ய, 2,650 அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 244 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளி ஒன்றிற்கு 75 ஆயிரம் ரூபாய் வீதம், 21 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் கண்காணிப்பு கேமரா–CCTV Camera வசதி அமைத்துத் தரப்படும். இத்திட்டத்தில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ள

பள்ளிகள், மாணவியர் பள்ளிகள் மற்றும் தேர்வு மையங்கள் உள்ள பள்ளிகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா காலணிகள் வழங்கும் திட்டம் இவ்வரசால் 2012–2013 ஆம் கல்வியாண்டு முதல் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 10 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் காலணிகளுக்குப் பதிலாக 2020–2021 ஆம் கல்வியாண்டு முதல் ஷூ மற்றும் சாக்ஸ் 10 கோடியே 2 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் வழங்கப்படும். இதனால் 28 இலட்சத்து 64 ஆயிரத்து 885 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளிக் கல்வித் துறைமூலம் இவ்வரசு செயல்படுத்த இருக்கும் இந்தத் திட்டங்களால் பள்ளி மாணவ, மாணவியர்கள் உரிய உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய பள்ளிகளில் மிகவும் உகந்த சூழலில் தரமான கல்வி கற்க வழிவகுக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கான நிருவாகக் கட்டடம் மற்றும் சென்னை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்ககத்திற்கான அலுவலகக் கட்டடம் கட்டுதல், அரசுக் கல்லூரிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் குடியிருப்பு வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் செய்தல் உள்ளிட்ட உயர் கல்வித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. தமிழ்நாட்டில் உள்ள 112 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பெரும்பாலானவை தேசிய தர மதிப்பீட்டுச் சான்றிதழ் பெற்று சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த